


இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நேற்று (10.09.2024) சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் பல்வேறு துறைகளின் சார்பில் 1607 நபர்களுக்கு 34.95 கோடி மதிப்பில் நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் கூட்டுறவுத்துறை அமைச்சர் கே. ஆர். பெரியகருப்பன், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் ஆர் எஸ். ராஜகண்ணப்பன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா காரைக்குடி மேயர் எஸ். முத்துதுரை, சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ். மாங்குடி, எஸ். முருகேசன், திருமதி. ஆர். தமிழரசி, சிவகங்கை மாவட்ட ஆட்சியர் திருமதி. ஆஷா அஜித், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாதரெட்டி, சர்வதேச செஸ் விளையாட்டு வீரர் பிரனேஷ், சர்வதேச டென்னிஸ் விளையாட்டு வீரர் நந்தகிஷோர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துக் கொண்டனர்.

# முதல்வர் மு.க.ஸ்டாலின் – ஊரகப் பகுதிகளில்

# 5000 நீர் நிலைகளைப் புனரமைக்க ரூ.500 கோடி ஒதுக்கீடு!

## ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அறிவிப்பு!

**சென்னை, செப்.11–**

**முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஊரகப் பகுதிகளில் 5000 நீர்நிலைகளைப் புனரமைக்க ரூ.500 கோடி ஒதுக்கீடு செய்து உத்தரவிட்டுள்ளார் என ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அறிவித்துள்ளார்.**



இது தொடர்பாக அரசு செய்தி வெளியீடு வருமாறு:

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சி, நீர் நிலைகளை தூர்வாரி, மழைநீரை சேகரித்து நீர் மேலாண்மை செய்வதற்கு முன்னுரிமை அளித்து பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

இதன் தொடர்ச்சியாக, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள 22,051 சிறுபாசன ஏரிகளில் முதற்கட்டமாக நடப்பாண்டில் 500 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 5,000 சிறுபாசன ஏரிகளை புனரமைப்பதற்காக 5.9.2024 அன்று அரசாணை வெளியிடப்பட்டுள்ளது என ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ. பெரியசாமி அறிவித்துள்ளார்.

இதன்படி, சிறுபாசன ஏரிகள் இயந்திரங்களைப் பயன்படுத்தி தூர்வாருதல் மற்றும் ஆழப்படுத்துதல், உபரி நீர்போக்கி (கலிங்கு), மதகு போன்ற அனைத்துக் கட்டமைப்புகளையும் பழுதுபார்த்தல் அல்லது புனரமைத்தல், இணைப்பு வரத்து வாய்க்கால்களைத் தூர்வாருதல் ஆகியவற்றை பொதுமக்கள் பங்கேற்புடன் செயல்படுத்துவது இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

இந்த நீர்நிலைகளைப் புனரமைப்பதால், நீர்நிலைகளின் கொள்திறன் அதிகரிக்கும். நிலத்தடி நீர் மட்டம் உயரும். வேளாண் நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதி ஏற்படும். உபரி நீர் வீணாவதையும் தடுக்கும். சிறுபாசன ஏரிகளின் கொள்ளளவினை மேம்படுத்தி புனரமைப்பதன் மூலம் வெள்ளம் மற்றும் வறட்சி ஆகிய இரண்டையும் தடுக்கும். பேரிடர் மேலாண்மை முயற்சிகளுக்கு இத்திட்டம் முக்கியப் பங்களிப்பு வழங்கும்.

மேம்படுத்தப்படும் ஏரிகளில் தேவைப்படும் கட்டுமானப் பணிகளான வரத்து மற்றும் போக்குக் கால்வாய், கலிங்கு, மதகு மறுசீரமைக்கும் பணிகள் தேவைப்படின் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் மேற்கொள்ளப்படும். சிறுபாசன ஏரிகளின் கரைகளை பலப்படுத்தி, பசுமைச் சூழலை ஏற்படுத்த பனை மற்றும் உள்ளூர் வகை மரக்கன்றுகள் நடப்படும்.

இத்திட்டம், அரசு மற்றும் அரசு சாரா நிறுவனம், சமூக அமைப்புகள், விவசாயிகள் சங்கம், கல்வி நிறுவனங்கள் போன்றவற்றின் சொந்த நிதி ஆதாரம் மற்றும் மக்கள் பங்களிப்புடன் கூடிய 'நமக்கு நாமே' திட்டம் மூலமாகவும் மற்றும் மீதமுள்ள சிறுபாசன ஏரிகளுக்கு அரசு நிதி மற்றும் ஊராட்சி அமைப்புகளின் நிதியின் மூலமாகவும் பணிகள் நிறைவேற்றப்படும்.

ஆயக்கட்டுதாரர்கள் மற்றும் பயன்பாட்டாளர் அமைப்புகளுடன் சேர்ந்து சிறுபாசன ஏரிகளின் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும். ஆயக்கட்டுதாரர்கள் மற்றும் பயன்பாட்டாளர் அமைப்பு இல்லாத பட்சத்தில், புதியதாக பயன்பாட்டாளர்கள் குழுக்கள் அமைத்து புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும். இத்திட்டத்தின் மூலம் ஊரகப் பகுதி விவசாயிகள் பெருமளவில் பயன்பெறுவதோடு நிலத்தடி நீர்மட்டமும் கணிசமாக உயரும்.

இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# விவசாயிகளுக்கு உர விற்பனை: இணை இடுபொருட்களை வாங்க

# உர விற்பனையாளர்கள் கட்டாயப்படுத்தக் கூடாது!

## வேளாண்மை-உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் உத்தரவு!

**சென்னை, செப்.11**

**விவசாயிகளுக்கு உர விற்பனை செய்யும் போது இணை இடுபொருட்களை வாங்க உர விற்பனையாளர்கள் மற்றும் இடுபொருள் விற்பனையாளர்கள் கட்டாயப்படுத்தக் கூடாது என வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் உத்தரவிட்டுள்ளார்.**



அதன் விபரம் வருமாறு:

வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் தலைமையில் நேற்று (10.09.2024), தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற ஆய்வுக்கூட்டத்தில் தமிழ்நாட்டில் தற்போது அனைத்து பயிர்களுக்கும் தேவையான உரத் தேவை இருப்பு மற்றும் விற்பனை குறித்து விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

ஆய்வுக்கூட்டத்தின் போது யூரியா, டிஏபி, பொட்டாஷ், காம்ப்ளக்ஸ் மற்றும் இதர உரங்களின் தேவை மற்றும் சம்பா பருவத்திற்கு தேவையான கையிருப்பு குறித்து ஆய்வு செய்யப்பட்டு தற்போதைய உர இருப்பு தேவையைவிட அதிகமாக அனைத்து மாவட்டங்களிலும் இருப்பு வைக்கப்பட்டுள்ளது உறுதி செய்யப்பட்டது.

போதுமான உர இருப்பு இருந்த போதிலும், வேளாண் இணை இடுபொருட்களை, விற்பனையாளர்கள் கூடுதலாக விவசாயிகளிடம் வாங்குவதற்குக் கட்டாயப்படுத்துவது தொடர்பாக விவசாயிகளிடமிருந்து கோரிக்கை பெறப்பட்டது. விவசாயிகளுக்கு உர விற்பனை செய்யும்போது இணை இடுபொருட்களை வாங்க கட்டாயப்படுத்தக் கூடாது என கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டது.

அவ்வாறு விவசாயிகள் விரும்பாத இடுபொருள்களை வாங்க வலியுறுத்தும் உர விற்பனையாளர்கள், இடுபொருள் விற்பனையாளர்களின் மீது சட்டப்படி நடவடிக்கை பாயும் என எச்சரிக்கப்பட்டது.

இதனை மீறும் உர விற்பனையாளர்கள் மற்றும் வேளாண் இடுபொருள் விற்பனை மையங்கள் மீது உரக் கட்டுப்பாட்டு ஆணை 1985இன்படி, கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளவும், தேவைப்படும் நிகழ்வில் உரிமத்தை ரத்து செய்யவும் வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் உத்தரவிட்டார்.

வேளாண்மை உதவி அலுவலர்கள் மற்றும் களப் பணியாளர்களுக்கு உரப்பயன்பாடு குறித்தும் மண்ணின் வளத்தை பாதுகாத்திடவும், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் போதிய பயிற்சி அளிக்க வேண்டும்.

மேலும், மாவட்ட அலுவலர்கள் பருவத்திற்குத் தேவையான உரங்கள் தட்டுப்பாடின்றி கிடைக்கவும், தரமான உரங்கள் வினியோகம் செய்வதையும் உறுதி செய்ய வேண்டும் எனவும் அறிவுரை வழங்கப்பட்டது.

இக்கூட்டத்தில் வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மைச் செயலாளர், செல்வி அபூர்வா, வேளாண்மைத் துறை இயக்குநர், பி.முருகேஷ், உர நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# மகாகவி பாரதியார் - டாக்டர் ப. சுப்பராயன் சிலைகளுக்கு மாலை!

## அமைச்சர்கள் அணிவிக்கிறார்கள்!

சென்னை, செப்.11-

மகாகவி பாரதியார் நினைவு நாள் (மகாகவி நாள்) சென்னை மாகாண மேனாள் முதலமைச்சர் டாக்டர். ப. சுப்பராயன் பிறந்த நாள் நிகழ்ச்சிகளில் அமைச்சர் பெருமக்கள் பங்கேற்று அவர்களுடைய திருவுருவச் சிலைகளுக்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்துவார்கள்.

தமிழ்நாடு அரசின் சார்பில், மகாகவி பாரதியார் அவர்களின் நினைவு நாளை (மகாகவி நாள்) முன்னிட்டு, அமைச்சர் பெருமக்கள், இன்று (11.9.2024) காலை 9.20 மணியளவில் சென்னை, மெரினா கடற்கரை, காமராஜர் சாலையில் அமைந்துள்ள அவரது திருவுருவச் சிலைக்கும்,

அதனைத் தொடர்ந்து, சென்னை மாகாண முன்னாள் முதலமைச்சர் டாக்டர் ப.சுப்பராயன் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு இன்று (11.9. 2024) அன்று காலை 9.50 மணியளவில் சென்னை, கிண்டி, காந்தி மண்டப வளாகத்தில் அமைந்துள்ள அவரது திருவுருவச்சிலைக்கும் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்துவார்கள்.

மகாகவி பாரதியார் அவர்கள் 11.12.1882 ஆம் ஆண்டு தூத்துக்குடி மாவட்டம் எட்டயபுரத்தில் சின்னச்சாமி ஐயர் - இலட்சுமி அம்மாள் தம்பதியருக்கு மகனாகப் பிறந்தார். இவரது கவிப்புலமையைப் பாராட்டி எட்டயபுர மன்னர் இவருக்கு "பாரதி" என்ற பட்டம் வழங்கினார். நவீன தமிழ் கவிஞர்களின் முன்னோடியாகவும், தமிழ் மொழியில் சிறந்த இலக்கியவாதியாகவும் திகழ்ந்த இவரை "மகாகவி" எனும் புனைபெயர் கொண்டு அழைக்கப் பெற்றார். தந்தை இறந்த பிறகு சில காலம் பாரதியார் காசியில் வாழ்ந்தார்.

மகாகவி பாரதியார் தமிழ், இந்தி, சமஸ்கிருதம், ஆங்கிலம் உள்ளிட்ட பல மொழிகளில் புலமை பெற்று விளங்கினார். மகாகவி பாரதியார் பல மொழிகளை கற்றறிந்தாலும், "யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்" என்று தமிழின் பெருமையை உலகறியச் செய்தார். மதுரை சேதுபதி பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றினார். 1904 முதல் 1906 வரை "சுதேச மித்திரன்" பத்திரிகையில் பணியாற்றினார். 1907 ஆம் ஆண்டு இந்தியா என்ற வார இதழையும், பாலபாரதம் என்ற ஆங்கிலே இதழையும் பொறுப்பேற்று நடத்தினார்.

கண்ணன் பாட்டு, குயில் பாட்டு, பாஞ்சாலி சபதம் போன்ற காவியங்களை படைத்தார். கீதையை தமிழில் மொழி பெயர்த்தார். மகாகவி பாரதியார் தமிழ்ப் பற்று, தெய்வப்பற்று, தேசப்பற்று, மானுடப்பற்று ஆகிய நான்கும் கலந்தவர். மகாகவி பாரதியார் மறைந்து நூறு ஆண்டுகள் கடந்தும், தமிழ் சமுதாயத்திற்காக அவர் விட்டுச் சென்ற கவிதைகள், கட்டுரைகள், பாடல்கள் ஆயிரம் ஆண்டுகள் ஆனாலும் உயிரோட்டமாக இருக்கும். பேரறிஞர் அண்ணா அவர்களால், "மக்கள் கவி" என்று அழைக்கப்பட்டார் மகாகவி பாரதியார்.

பாரதியாரின் சுதந்திரப் போராட்ட நடவடிக்கையால், ஆங்கில அரசால் கைது செய்யப்பட்டு கடலூர் சிறையில் அடைக்கப் பட்டார். 1921 ஆம் ஆண்டு செப்டம்பர் 11ஆம் நாள் மறைந்தார். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஆட்சிக் காலத்தில் எட்டயபுரத்தில் பாரதியார் பிறந்த இல்லத்தை 12.5.1973 அன்று அரசுடைமையாக்கப்பட்டு நினைவு இல்லமாக பராமரிக்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பாரதியின் நினைவு நாளான செப்டம்பர் 11.9.2024 அன்று "மகாகவி நாள்"ஆக கடைப்பிடிக்கப்படும் என அறிவிக்கப் பட்டதை தொடர்ந்து, தமிழ்நாடு அரசின் சார்பில் "மகாகவி நாள்" ஆண்டுதோறும் கொண்டாடப்பட்டு வருகிறது.

இந்த ஆண்டின், மகாகவி பாரதியார் அவர்களின் நினைவு நாளான 11.9.2024 காலை 9.20 மணியளவில் அமைச்சர் பெருமக்கள், சென்னை, மெரினா கடற்கரை, காமராஜர் சாலையில் அமைந்துள்ள அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்துகிறார்கள்.

சென்னை மாகாண மேனாள் முதலமைச்சர் டாக்டர் ப. சுப்பராயன் அவர்கள் நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு வட்டம் குமாரமங்கலத்திற்கு அருகேயுள்ள போக்கம்பாளையத்தில் பிறந்தார். இவர் ஜமீன்தார் குடும்பத்தைச் சார்ந்தவர். சென்னை மாநிலக் கல்லூரியில் இளங்கலைப் பட்டமும், இலண்டன் ஆக்ஸ்ஃபோர்ட் பல்கலைக்கழகத்தில் முதுகலைப் பட்டமும், அயர்லாந்து டப்ளின் பல்கலைக் கழகத்தில் சட்டக் கல்வி பட்டமும் பெற்றார். இந்தியாவின் முதல் பிரதமரான ஜவஹர்லால் நேரு இவரது வகுப்பு தோழர் என்பது குறிப்பிடத்தக்கது.

1918 ஆம் ஆண்டு சென்னை உயர் நீதி மன்றத்தில் வழக்கறிஞராகப் பணியாற்றினார். டாக்டர் ப. சுப்பராயன் அவர்கள் சென்னை மாகாணத்தின் உள்ளாட்சித் துறை அமைச்சர், கல்வி மற்றும் சட்ட அமைச்சர், உள்துறை அமைச்சர், சட்டமன்ற மேலவை உறுப்பினர். இந்தோனேசியாவிற்கான இந்தியத் தூதுவர், இந்திய நாடாளுமன்ற கீழவை உறுப்பினர், மேலவை உறுப்பினர் ஆகிய பதவிகளை வகித்துள்ளார்.

சென்னை மாகாணத்தின் முதலமைச்சராகவும் டாக்டர் ப. சுப்பராயன் அவர்கள் பதவி வகித்தார். இவரது ஆட்சிக் காலத்தில், முதல்முறையாக அரசாங்கப் பணிகளில் வகுப்புவாரி பிரதிநித்துவ அடிப்படையில் இடஒதுக்கீடு சட்டம் நிறைவேற்றப்பட்டது.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் 1937 ஆம் ஆண்டு சென்னை மாகாணத்திற்கு மாநில சுயாட்சி வழங்கப் பட்டபின் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். மூதறிஞர் இராஜாஜி அமைச்சரவையில் சட்டம் மற்றும் கல்வித் துறை அமைச்சராகப் பதவி வகித்தார். 1942இல் வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் பங்கு கொண்டு சிறை சென்றார்.

நாடு சுதந்திரம் அடைந்த பிறகு ஒன்றிய அரசின் தபால் துறை அமைச்சராக திகழ்ந்த இவர் திருவள்ளுவர் மற்றும் பாரதியாரின் புகைப்படத்துடன் கூடிய தபால் தலைகளை வெளியிடச் செய்தார். அனைத்து தபால் துறை படிவங்களையும், தமிழ் மொழியிலும் கிடைக்கச் செய்தார். இந்தியப் பாராளுமன்றத்தில் திருவள்ளுவர் திருவுருவப் படம் திறந்து வைக்கப்பட்டதும் இவர் காலத்தில்தான்.

தமிழுக்கும் தமிழ்நாட்டு மக்களுக்கும் அயராது உழைத்தவரான சென்னை மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சரான டாக்டர் ப.சுப்பராயன் அவர்களின் நினைவைப் போற்றுகின்ற வகையில், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை, கிண்டி காந்தி மண்டப வளாகத்தில் அவரது திருவுருவச் சிலையை நிறுவி 5.9.2023 அன்று திறந்து வைத்தார்கள்.

சென்னை மாகாண முன்னாள் முதலமைச்சர் டாக்டர் ப. சுப்பராயன் அவர்கள் பிறந்த நாளான செப்டம்பர் 11 ஆம் நாள் அரசு விழாவாக ஆண்டு தோறும் சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது. இந்த ஆண்டின், டாக்டர் ப.சுப்பராயன் அவர்களின் பிறந்தநாளான 11.9.2024 அன்று காலை 9.50 மணியளவில் சென்னை, கிண்டி, காந்திமண்டப வளாகத்தில் அமைந்துள்ள அவரது திருவுருவச்சிலைக்கு மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்துவார்கள். இந்நிகழ்ச்சிகளில், மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர், உள்ளாட்சி பிரநிதிகள், சீர்மிகு பெருமக்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

# பொது விநியோகத் திட்ட மக்கள் குறைதீர் முகாம்!

## உணவுப்பொருள் வழங்கல் - நுகர்வோர் பாதுகாப்புத்துறை அறிவிப்பு!

சென்னை, செப்.11-

சென்னையிலுள்ள 19 மண்டலங்களில் வருகின்ற 14.09.2024 அன்று பொது விநியோகத் திட்ட மக்கள் குறைதீர் முகாம் நடைபெறும் என உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை இயக்குநர் அறிவித்துள்ளார்.

இது தொடர்பான செய்தி வெளியீடு வருமாறு:-

பொது விநியோகத் திட்டத்தின் பயன்களை குடிமக்கள் எளிதில் பெறும் வகையில் தமிழ்நாடு முழுவதும் ஒவ்வொரு வட்டத்திலும் மக்கள் குறைதீர் முகாம் ஒவ்வொரு மாதமும் நடத்தப்படும் என அரசு அறிவித்துள்ளது.

அதன்படி செப்டம்பர் 2024 மாதத்திற்கான மாதாந்திர பொது விநியோகத் திட்ட மக்கள் குறைதீர் முகாம் சென்னையில் உள்ள உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் 19 மண்டல உதவி ஆணையாளர் அலுவலகங்களில் 14.09.2024 அன்று காலை 10.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை நடைபெறவுள்ளது.

குடும்ப அட்டைகளில் பெயர் சேர்த்தல், பெயர் நீக்கம், முகவரி மாற்றம், கைபேசி எண் பதிவு / மாற்றம் செய்தல் உள்ளிட்ட பொது விநியோகத் திட்டம் தொடர்பான சேவைகள் மேற்கொள்ளப்படும். மேலும், நியாய விலைக் கடைகளில் பொருள் பெற நேரில் வருகை தர இயலாத மூத்த குடிமக்கள் உள்ளிட்டோருக்கு அங்கீகாரச் சான்று வழங்கப்படும்.

மேலும், பொது விநியோகக் கடைகளின் செயல்பாடுகள், தனியார் சந்தையில் விற்கப்படும் பொருட்கள் அல்லது சேவைகளில் குறைபாடுகள் குறித்த புகார்கள் ஏதேனும் இருப்பின் அவற்றை பொதுமக்கள் இம்முகாமில் தெரிவித்தால் குறைகளை விரைந்து தீர்வு செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

சென்னையிலுள்ள 19 மண்டல அலுவலகப் பகுதிகளில் உள்ள குடும்ப அட்டைதாரர்கள் இச்சேவையினை பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை இயக்குநர் அறிவித்துள்ளார்.



மகாகவி பாரதியார்
அவர்களின்
நினைவு நாள்

மேனாள் சென்னை மாகாண முதலமைச்சர்
டாக்டர் ப.சுப்பராயன்
அவர்களின்
பிறந்த நாள்

மகாகவி நாள்



தமிழ்நாடு அரசின் சார்பில்
மகாகவி பாரதியார்
மற்றும்
மேனாள் சென்னை மாகாண முதலமைச்சர்
டாக்டர் ப.சுப்பராயன்
ஆகியோர் திருவுருவச் சிலைகளுக்கு
நாள் : 11.9.2024, புதன்கிழமை
மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள்,
மாண்புமிகு மேயர்,
நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள்,
துணை மேயர்,
உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள்,
சீர்மிகு பெருமக்கள்
மலர் தூவி மரியாதை செலுத்துவார்கள்.



நேரம் : காலை 9.20 மணி
இடம் : காமராஜர் சாலை, மெரினா கடற்கரை, சென்னை

நேரம் : காலை 9.50 மணி
இடம் : காந்தி மண்டப வளாகம், கிண்டி, சென்னை

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in

இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத் துறை, சென்னை-600 009

செ.ம.தொ.இ./928/வரைகலை/2024